செ.வெ.எண்: 68 நாள்: 24.11.2016

# பொதுமக்கள் அனைவரும் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் சிறுசேமிப்புத்துறையின் சார்பில் உலக சிக்கன நாள் விழாவை முன்னிட்டு மாவட்ட அளவில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.11.2016) வழங்கி கூறியதாவது:

பொதுமக்களிடையே சிறுசேமிப்பின் அவசியம் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் உலக சிக்கனநாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உலக சிக்கன நாள் விழாவினை முன்னிட்டு மாவட்ட அளவில் பள்ளிகளில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இதன்படி பேச்சுப்போட்டியில் புதுக்கோட்டை மௌண்ட்சியோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி ஜெர்லின் முதலிடத்தையும், இராணியார் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவி எழில்பிரியதர்சினி இரண்டாம் இடத்தையும், காமராஜபுரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவன் சரவணன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

நடனப்போட்டியில் மௌண்ட்சியோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி சிவரஞ்சனி முதலிடத்தையும், திருஇருதய மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி ஸ்ரீஜா இரண்டாம் இடத்தையும், இராணியார் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவி பிரியதர்சினி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். கட்டுரைப்போட்டியில் மௌண்ட்சியோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி அபரார் பானு முதலிடத்தையும், இராணியார் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவி சத்யா இரண்டாம் இடத்தையும், காமராஜபுரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவன் வினோத் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மேலும் நாடகப்போட்டியில் மௌண்ட்சியோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் குணசங்கரி, சுப்புலெட்சுமி, ஜெர்லின்மேரி, முத்துவேதா, மாணவர்கள் கீர்த்தி புவனேஸ்வர், தினேஷ்குமார், ஹரிசங்கர், ஹரிஸ்கிருஷ்ணன் முதலிடத்தையும், திருஇருதய மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் சண்முகப்பிரியா, ஹேமலதா, ராஜலெட்சுமி, ரிஷ்யா, மணிமேகலை இரண்டாம் இடத்தையும், இராணியார் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் பிரியங்கா, லலிதா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் சிக்கனமாக செலவு செய்து கஷ்டமின்றி வாழ முடியும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) திருமதி.எஸ்.பேபி எபனேசர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**